அன்பு ஆகஸ்ட் 2017 மலர்-11 இதழ்-12

# அன்பு பாலம்

தினமும் ஓர் உயிருக்கு நல்லது செய்வோம்

விலை ₹20/-

www.anbupaalam.org Email: anbupaalameditorial@gmail.com



## பத்மஸ்ரீ Dr. பாலா வி. பாலச்சந்திரன் சிறப்பிதழ்

பாலம் இதழின் விற்பனை வருமானம் முழுவதும் கல்விப்பணிக்கே!

கவிமாமணி எதிரொலி விசுவநாதன்

# பூரணசந்திரனாகப் பொலிபவர்

பாலச்சந்திரன் என்பது விநாயகப்
பெருமான் திருப்பெயர் பதினாறில் ஒன்று!
ஆதிமுதல்வனின் அத்திருப் பெயரைப்
பெற்றோர் பிள்ளைக்குச் சூட்டி வைத்தனர்!

(ஆனால்)

உற்ற நண்பர்களோ ஒருமனத்தோடு
பாலா! பாலா! பாலா! என்றே
செல்லமாய்ப் பிரியமாய் விருப்பத்தோடு
தினமும் அழைத்து மனம் மகிழ்ந்தார்கள்!

இந்த இருபெயர் இணைந்து ஒளிவீச
பொங்கு புதுப்பெயரில் மங்காத நிலவாய்
தங்கத்தில் வைரம் பதித்தாற் போன்று
பாலா - வி. பாலச்சந்திரன் ஆகப்
பொலிபவர் புகழை எடுத்துச் சொல்கின்றேன்!

தண்ணீர் மேலாக முகம் காட்டுகின்ற
தாமரைப் பூபோல் மண்ணின் மேலே
மேனாடும் வியக்க மேலாண்மைக் கல்வித்
தாளாளராக இருப்பவர் இவரே!

* புதுக்கோட்டை வயலில் நாற்றாய் முளைத்து
  அமெரிக்க வயலில் நெல்லாய் விளைந்தவர்!
* புதுகை வானில் பிறையாய்த் தோன்றி
  பௌர்ணமியாக அமெரிக்க வானிலே
  வெளிச்சம் தருகின்ற வித்தகர் இவரே!
* பாலச்சந்திரன் என்கிற பெயரில்
  பரிபூரண சந்திரன் ஆகப் பொலிபவர்!


அண்ணாமலைப் பல்கலைக் கழகம் படித்தார்!
அமெரிக்காவில் பட்டம் பெற்றார்!
விவேகானந்தர் வெற்றி நாட்டிய
சிகாகோ நகரில் பேரா சிரியராய்
பொருளியல் பாடம் புகட்டுகின்றார்

அமெரிக்காவில் வாழ்ந்தாலும்கூட
அன்னை நாட்டை மறக்காத மைந்தர்!
இந்தியர் பலரை அமெரிக்கா அழைத்துப்
பாடம் பயிற்றிப் பட்டம் தருபவர்!
அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமாவே
பாராட்டி மகிழ்ந்த இந்தியர் இவரே!

உலகத் தரத்தில் ஓங்கு மேலாண்மைக்
கல்வி நிறுவனம் கண்டு உழைப்பவர்!
சென்னை - தில்லி - ஐதராபாத்தில்
ஞாலம் புகழும் மேலாண்மைக் கல்விக்
கல்லூரி நடத்தும் பல்கலைச் செல்வர்

அயல்நாடு வாழும் இந்திய நாட்டோர்
அபூர்வமாகப் பெறுவது பத்மஸ்ரீ ஆகும்!
அந்த விருதைப் பெற்ற முதல்வராய்
அமெரிக்கா வாழும் இந்தியர் இவரே!

தாயகம் திரும்பி வரும்போதெல்லாம்
தவறாது தமது பால்ய நண்பர்களைச்
சந்தித்து மகிழும் இந்தமனிதர்
குழந்தை இலக்கியப் பணிச்செல்வரான
வெங்கட்ராமனின் பள்ளித் தோழர்!
ஆழநெஞ்சில் பதிந்த அன்னார்க்குத்
தோழமையோடு சென்னையில் பெருவிழா
எடுத்த இவரை இதயம் மகிழ
வாழ்த்துகின்றேன்! வளர்க இவர் புகழே!





அமெரிக்காவில் வாழும் தமிழர் ஒருவருக்கு 2001ஆம் ஆண்டில் இந்தியாவில் பத்மஸ்ரீ விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. அமெரிக்கக் குடிமகனாக வாழ்ந்து கொண்டே இந்தியாவின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு வழிகளில் பணியாற்றி வருகிறார் என்பது பாராட்டிற்கு உரிய செய்தியல்லவா? அவர் புதுகையைச் சேர்ந்தவர் என்பது இன்னும் பெருமிதத்திற்கு உரியது. அவ்வாறு புதுகையின் பெருமிதப் புதல்வராகத் திகழும் பத்மஸ்ரீ டாக்டர் பாலா வி. பாலச்சந்திரன் அவர்களைச் சந்தித்தோம்.

புதுகையில் பிறந்து வளர்ந்து குலபதி பாலையா நடுநிலைப்பள்ளி, த.ச.லு.ச. உயர்நிலைப் பள்ளி, புதுகை மாமன்னர் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்று பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1963 வரை பட்டமேற்படிப்பு பெற்று சில ஆண்டுகளிலேயே அமெரிக்க நாட்டில் டாக்டர் பட்டம் பெற்றவர் பாலா வி. பாலச்சந்திரன்.

1969ஆம் ஆண்டில் அமெரிக்க டேய்டன் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்த பாலா தற்போது இல்லி நாய்ஸில் உள்ள நார்த் வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜே.எல். கெல்லாக் நிருவாக இயல் கல்லூரியின் பேராசிரியர். அமெரிக்காவில் மட்டுமன்றி இந்தியாவிலும் பல்வேறு கல்வி நிறுவனங்களிலும் தொழில் குழுமங்களிலும் ஆலோசகராகவும் பயிற்சி அளிப்பவராகவும் உள்ளார்.

உலகப்புகழ்பெற்ற மேலாண்மை மற்றும் நிருவாக இயல் வல்லுநராகத் திகழும் பாலா வி. பாலச்சந்திரன் அவர்களைப் புதுகைத் தென்றலுக்காக 21.8.2007 அன்று நேர்காணலில் சந்திக்க நானும் ஐ.டி. ஃபிரான்சிசும் சென்றிருந்தோம். புதுகையின் சிறுவர் இலக்கியச் செல்வர் திரு. பி. வெங்கட்ராமனும் உடனிருந்தார். எங்கள் நேர்காணலுக்கு இடையே பாலா பங்கேற்ற பத்திரிகையாளர் சந்திப்பும் இடம்பெற்றிருந்தது. களம் விரிவானது. பாலா சென்னையில் நிறுவியுள்ள கிரேட் லேக்ஸ் நிருவாக இயல் நிறுவனத்திற்கு இந்திய அரசு விடுத்துள்ள அழைப்பு குறித்து அன்று பத்திரிகையாளர்களிடம் விவரித்துக் கொண்டிருந்தார். இந்தியாவில் குழும நிறுவன விவகாரங்களுக்கான இந்தியப் பயிலகம் ஒன்றை உலகத்தரத்தில் அமைத்திட, இத்தகைய பணியை மேற்கொள்ளும் வாய்ப்பு பெருமிதத்திற்கு உரியதுதான்.

ஐந்து அடைப்புகளுக்கான இதய அறுவை செய்து கொண்டுள்ள பாலா, மருத்துவர்களின் ஆலோசனையையும் மீறி விரைந்து செயல்படுகிறார். விரைவாக இயற்கை எய்த நேரிட்டாலும் நான் வாழ்ந்ததற்கு அடையாளமாக ஒரு மரபுச் செல்வத்தை விட்டுச்செல்ல வேண்டும். இப்பணி, என்னுடைய பேரார்வம் மிக்கது. புனிதப் போரைப் போன்றது என்றும் உணர்ச்சிவசப்பட்டார்!

## நேர்காணலில்

## புதுகையின் பெருமிதப் புதல்வர்

# டாக்டர் பாலா வி. பாலச்சந்திரன்

**உலகத் தரத்தில் குழும நிறுவன விவகாரங்களுக்கான இந்தியப் பயிலகம் அமைத்திட இந்திய அரசு அழைப்பிதழ்!**

ஏழைக் குடும்பத்தில் பிறந்து உலகளாவிய ஏற்றம் பெற்றுள்ள பாலா, சிகரங்களைத் தொடுவதற்கு ஏழ்மை ஒரு தடையே அல்ல என்கிறார். திறமையையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொண்டால் தடைகளைக் கடந்துவிடலாம். உயர் கனவு காணும் உள்ளம் வேண்டும். கனவுகளை நினைவாக்குவதற்குக் கடுமையாக உழைக்க வேண்டும். இலட்சியக் கனவுகளுக்கு வானமே எல்லை என்பதை உணர வேண்டும். தன் முயற்சியாலும் உழைப்பாலும் தனக்குத்தானே உதவி செய்து கொள்ளாதவர்களுக்குக் கடவுள் எப்படி உதவி செய்வார்? அதனை எப்படி எதிர்பார்க்கலாம்? என்று விவரித்தார்.

புதுகையில் பிறந்து புவியில் உயர்நிலை பெற்றுள்ள பாலாவிடம் புதுகையைப் பற்றிப் பேசியதும், 'புதுகை மக்கள் பாரம்பரியத்திலும், பண்பாட்டிலும், விழுமியங்களிலும் உயர்ந்தவர்கள் என்பதோடு உன்னத வாழ்வு வாழ்வதில் விழைவார்ந்த விருப்பம் மிக்கவர்கள். இன்றைய மக்கள் அத்தகைய வாழ்வு வாழ்வது என்பது அவரவர் கையில்தான்' என்றார். அவர்கள் விரைந்து தொழில் செய்ய வேண்டும்; நிறுவ வேண்டும்; விளைநிலங்களை இயற்கை வளமிக்க விவசாய நிலங்களாக உயர்த்த வேண்டும் என்றும் பல்வேறு யோசனைகளைத் தெரிவித்தார்.

புதுகையில் இளைஞர்கள் குறிக்கோள் மிக்கவர்களாகத் திகழ வேண்டும். உறுதி இருந்தால் உயர்வடையலாம். இளமையில் இரண்டு வேளை உணவுக்குப் போராடிய குடும்பச் சூழலில், ஏளனத்தை எதிர்கொண்டு வெல்வதற்குரிய மனஉறுதி இருந்ததால் தான் என்னால் வாழ்க்கையில் வெற்றிகொள்ள முடிந்தது. இன்று சென்னையில் மட்டும் 4000 பேருக்கு வேலை தர முடிகிறது. உலகத் தரத்தை இலக்காகக் கொண்டு சென்னையில் நிருவாக இயலில் உயர்கல்விப் பயிற்சி நிறுவனத்தை நிறுவ முடிந்தது என்ற பாலா, தில்லிதான் அரசியல் இந்தியாவின் தலைநகர் என்றால், மும்பைதான் நிதியின் தலைநகர் என்றால், சென்னைதான் அறிவின் தலைநகர் என்றார்.

சென்னை கிரேட்லேக்ஸ் நிருவாக இயல் பயிற்சி நிறுவனம் பற்றியும் இந்தியாவின் பிற பகுதிகளில் பாலா மேற்கொண்டுவரும் பணிகள் பற்றியும் விவாதித்துக் கொண்டிருந்தபோதே, 'புதுகைக்கு இவற்றை எப்போது விரிவுபடுத்துவீர்கள்' என்று வினா எழுப்பினோம்.

புதுகையில் பிறந்து வளர்ந்து கல்வி பயின்று தற்போது அமெரிக்காவில் வாழும் இந்தியரான பத்மஸ்ரீ டாக்டர் பாலா வி. பாலச்சந்திரன் இந்தியாவின் முன்னேற்றத்திற்காக, தன் துறை சார்ந்த பங்களிப்பைச் செய்து பாராட்டுகள் பல பெற்றுத் திகழ்கிறார். தான் பணியாற்றும் அமெரிக்கப் பல்கலைக்கழகம் சார்ந்த நிருவாகவியல் பயிலகங்களில் இந்திய அரசின் உயர் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பணியில் பாலா தொடர்ந்து ஈடுபட்டு வந்த நிலையில் *1991* முதல் *1995* வரை அமெரிக்காவிலிருந்து பேராசிரியர்கள் பலர் இப்பயிற்சிப் பணிக்காக இந்தியாவுக்கும் வந்து சென்றனர். இதைவிட, இந்தியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குத் தகுதிவாய்ந்த நிருவாகவியல் நிறுவனம் ஒன்றை இந்தியாவிலேயே ஏன் அமைக்கக்கூடாது என்ற எண்ணம் பாலாவுக்குத் தோன்றியது. பல நிலைகளைக் கடந்து, இந்த எண்ணம் செயல் திட்டமாக உருவெடுத்தது. உரிய குழு ஒன்று அமைக்கப்பட்டது.

பயிற்சி நிலையம் தொடங்கும் முயற்சியில் அதற்குரிய



இடமாக முதுன்முதலில் 'மும்பை' ஆலோசிக்கப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டது. சென்னை, பெங்களூர், ஐதராபாத், டெல்லி ஆகிய நகரங்களுக்கு இக்குழு இடம்தேடிச் சென்றது. ஆந்திராவின் அன்றைய முதல்வர் மாண்புமிகு சந்திரபாபு நாயுடு மட்டுமே விமான நிலையத்துக்கே வந்து மாலையுடன் அவர்களை வரவேற்றார். 210 ஏக்கர் நிலத்தை அளித்து, நிலையம் அமைக்க வேண்டியதைக் கவனிக்க ஒரே அரசுத் துறையிடம் கொடுத்தார். 1998இல் அனுமதி அளித்து, டிசம்பர் 1999இல் அடிக்கல் நாட்டி. மளமளவென்று ஒன்றரை ஆண்டில் முடித்து, 2001இல் திறக்கப்பட்டது இந்திய மேலாண்மைக் கல்வி நிலையம் (*Indian School of Business, www.isb.edu.*) பல அமெரிக்கப் பல்கலைக்கழகங்களைவிடச் சிறப்பாகவும், கெல்லாக், ஹார்வர்டு பல்கலைக்கழகங்களுக்கு இணையான வசதியுள்ளதாகவும் கட்டப்பட்டுள்ள இந்த நிலையத்தின் முதல் அணி மாணவர்கள் சூன் 2002இல் அப்போதைய குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம்

தலைமையில் பட்டம் பெற்றனர். இதனைத் தவிரவும் சாம் பிட்ரோடாவுடன் இணைந்து இந்தியச் செயல் இயக்கம் *(Action India Movement)* என்ற அமைப்பினையும் பாலா தொடங்கி நடத்தி வருகிறார். இவ்வமைப்பின் மூலம் குசராத், இராஜஸ்தான மாநிலங்களில் சோதனை முறையில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவருடைய முயற்சியால் ஒளிபெற்றுத் திகழும் இன்னொரு நிறுவனம், தில்லியை அடுத்துள்ள குர்காம் பகுதியில் இயங்கிவரும் மேலாண்மையியல் வளர்ச்சிப் பயிலகமாகும்.

இவ்வாறு இந்தியாவின் பிற பகுதிகளிலும், வெளிநாடுகளிலும் முன்னேற்ற முயற்சிகள் மேற்கொண்டுள்ள பாலா, தமிழகத்தின் தலைநகரிலும் மேலாண்மைப் பயிலகம் ஒன்றைத் தொடங்கியுள்ளார். சென்னையில் நீச்சல் குளத்துடன் கூடிய தன் சொந்த வீட்டை விற்றுவிட்டு கிரேட் லேக்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் மானேஜ்மென்ட் *(Great Lakes Institute of Management)* என்னும் மேலாண்மையியல் பயிலகத்தை மூன்றாண்டுகளுக்குமுன் தொடங்கினார். ஆசியாவிலேயே சிறந்த நிறுவனமாக உருவாக்க வேண்டும் என்ற உயர்நோக்குடன் அவர் தொடங்கியுள்ள இப்பயிலகம் கடந்த மூன்று ஆண்டுகளில் மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும் அதிக அளவில் மாணவர்கள் இங்கு வந்து பயின்று வருகின்றனர். இங்குப் பயிலும் மாணவர்கள் படிப்பை முடிக்கும் தறுவாயில் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 9.5 இலட்சம் ரூபாய் ஊதியம் பெறும் வேலை வாய்ப்புகளைப் பெறுகின்றார்.

அறிவின் தலைநகராம் சென்னையில் மேலும் மேலும் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் விதத்தில் தொழில் முனைவோரை ஈர்க்கும் அளவில் நமது பணிகள் வளரவேண்டும் என்றும் விரும்புகிறார்.

பாலா சென்னையில் தொடங்கியுள்ள இந்த நிறுவனத்தின் அனுபவம், இத்துறையில் பாலாவின் மதிநுட்பம் இவற்றை மதித்துப் போற்றும் இந்திய அரசு, இந்தியாவில் குழும நிறுவன விவரங்களுக்கான இந்தியப் பயிலகம் *(Indian Institute of Corporate Affairs - IICA)* ஒன்றை உலகத் தரத்தில் நிறுவிட இவருக்கு அழைப்பு விடுத்துள்ளது. இதற்கான விரிவான செயல் திட்டம் ஒன்றை விரைவில் உருவாக்குமாறும் கடிதம் மூலம் அவரைக் கேட்டுக் கொண்டுள்ளது. கலந்தாலோசனை நடத்துவதற்கான நிறுவனத்தையும் உறுதிப்படுத்தியுள்ளது. சென்னை நிறுவனத்தின் மூன்றாண்டுப் பணியில் இது மிகப்பெரிய வளர்ச்சி என்று பெருமிதம் கொள்கிறார் பாலா.

தமிழகத்திலும், இந்தியாவின் பிற பகுதிகளிலும் முன்னேற்றப் பணிகளைப் புதுகையில் மேற்கொள்வது எப்போது என்று வினவினோம். நிருவாக இயல் நிறுவனத்தை நிச்சயம் புதுகைக்குக் கொண்டு வருவேன் என்று உணர்ச்சிப் பொங்கக் குறிப்பிட்ட பாலா, "உடனே இயலாது... எனினும், எப்படியும் அதைச் செய்து முடிப்பேன்" என்று உறுதி கூறினார். ●

**நன்றி: திரு.புதுகை தருமராஜன்**

# பண்பின் சிகரம் பாலா!

பி. வெங்கட்ராமன்



**"பசுமை நிறைந்த நினைவுகளே...**
**பாடிப் பறந்த பறவைகளே..."**

என்று பரவசத்துடன் நெகிழ்ந்து, மகிழ்ந்து பாடித் தமது உரையைத் தொடங்கினார், அந்த வி.ஐ.பி.

அவர் வி.ஐ.பி. மட்டுமல்ல, வி.ஐ.ஐ.பி. (*Very Important International Person*) என்றே சொல்லலாம். அவர்தான் டாக்டர் பாலா வி. பாலச்சந்திரன் அவர்கள்.

உலகளாவிய அளவில் நன்கு அறியப்பட்ட பொருளாதாரக் கணக்கியல் மேதை, சிகாகோவில் கெல்லாக் பல்கலைக்கழகப் பேராசிரியர், சென்னை கிரேட்லேக்ஸ் மேலாண்மைக் கல்லூரியின் நிறுவனர் - தலைவர்.

இவரிடம் பயின்றவர்கள் உலக அரங்கில் சிறந்த தொழிலதிபர்களாக விளங்குகின்றனர். அயல்நாடுவாழ் தமிழர்களில் 'பத்மஸ்ரீ' விருது முதலில் பெற்றவர்.

என்னுடன் எழுபது ஆண்டுக்கால நட்பைப் பாராட்டி 'நட்புக்கோர் திருவிழா' என்று மயிலாப்பூரில் நடத்தியது பலருடைய புருவத்தை உயர்த்தியது உண்மை.

உலக அதிசயமாக திகழ்ந்த இந்த 'நட்புக்கோர் திருவிழா'வில் நகரில் இலக்கிய சமூகப் பிரபலங்கள் பலரும் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்கியது குறிப்பிடத்தக்கதாகும்.

மயிலாப்பூரில் நடந்த இந்த விழா மறக்கமுடியாத ஒன்று.

புதுக்கோட்டை குலபதி பாலையா பள்ளியில் துவக்க வகுப்புகளிலிருந்து இணைந்து நாங்கள் கல்வி கற்றதையும் மறக்க முடியாது.

எங்கள் இருவருடன் படித்தவர்கள் முன்னாள் அட்வகேட் ஜெனரல் திரு. என்.ஆர். சந்திரன், சென்னைத் துறைமுக அலுவலகத்தில் கணிதமேதை ராமானுஜம் இருக்கையில் அமர்ந்து அலுவல் பார்த்த இன்றைய பிரபல எழுத்தாளர் பூரம் சத்தியமூர்த்தி, இந்திய கார்ப்பரேட் நிறுவனங்கள் பலவற்றின் ஆலோசகர் திரு. என். ராமசாமி (இருபதுக்கு மேல் பட்டங்கள் பெற்றவர்) பிரபல கவிஞர் அமரர் சொ. அடைக்கலம் ஆகியோர்.

நாங்கள் படித்த பாலையா பள்ளிக்குத் தனிப்பெரும் சிறப்பு உண்டு. மாதர்குல முன்னேற்றத்திற்காகப் பெரிதும் பாடுபட்ட டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, நாட்டிய கலை வளர நன்கே நல்லுழைப்பு நல்கிய ருக்மிணி அருண்டேல் ஆகியோர் நாங்கள் படித்த குலபதி பாலையா பள்ளியில் கல்வி பயின்றவர்கள் என்ற பெருமையில் காலரைத் தூக்கி வைத்துக் கொள்வோம்.

ஆரம்பகால வகுப்புகளில் அரை டிராயர் காலத்தில் அட்டகாசங்களும் அடிக்கடி ஒருவருக்கொருவர் சீண்டிக்கொள்வதும் இருக்கும்.

ஆனால், எங்களைப் பொறுத்தவரை அமைதியாகப் படிப்பதும் அவ்வப்போது ஓடிப்பிடித்து விளையாடுவதும் வாத்தியார் வகுப்புகளுள் நுழையும்போது 'கப்சிப்' ஆகிவிடுவதும் உண்டு.

பொதுவாக 'பாலா' அமைதியாக இருப்பார். கணக்கில் படுசுட்டி. கணக்கில் நூற்றுக்கு நூறு வாங்கிவிடுவார். அதனால் என்னவோ கணக்கியல் துறையில் தலைசிறந்து விளங்கி வருகிறார் எனத் தோன்றுகிறது.

பாலா அவர்கள் கணக்கில் நிறைய மதிப்பெண் எடுக்கக் காரணம் அவரது தந்தையார் வி. வெங்கட்ராமையர் தந்த ஊக்குவிப்பு எனலாம்.

"சரியாக விடை எழுதினால் ஒரு அணா சன்மானம்" என்று தந்தையார் சொல்ல, பிழையின்றி விடை எழுத முயல்வார், பாலா. ஒரு அணா அந்த காலத்தில் ஒரு பெரிய தொகை. இதை பாலா தன்னுடைய பேட்டியில் கூறியுள்ளார்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கு அன்றைய அவரது கவனமான நல்லுழைப்பே காரணம் எனக் கூறலாம்.

**'எதிலும் முதன்மை'**
**'எதிலும் மேன்மை'**

என்பதே அவரது குறிக்கோள்.

நான், பூரம், அடைக்கலம், என்.ஆர். சந்திரன் ஆகியோர் போட்டிப் போட்டுக் கொண்டு கையெழுத்துப் பத்திரிகை நடத்துவோம்.

சமஸ்கிருத வகுப்புகளிலும், பாட்டு வகுப்புகளிலும் நானும் பாலாவும் ஒரே பெஞ்சில்தான் உட்காருவோம்.

சென்னையில் அவர் கல்லூரியில் நடக்கும் சிறப்பு

விழாக்களில் இறைவணக்கத்தைத் தொடர்ந்து 'வாகர்தாவிவ சம்ப்ருத்வ்' என்று அட்சர சுத்தமாக அவர் பாடும்போது அந்தக்கால சமஸ்கிருத வகுப்பு நினைவுக்கு வரும்.

சங்கீத வகுப்புகளில் பாரதியாரின் 'வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்' என்று நன்றாகப் பாடி 'சபாஷ்' வாங்கியது நினைவுக்கு வருகிறது.

சின்னச் சின்ன குறும்புகளும் சீண்டிப் பார்ப்பதும் சிறுவர்களுக்கு இயற்கை.



அனைவரும் பாராட்டும் போது பெருமையளிக்கிறது.

இனிய முகம், இன்சொல், எளிய சுபாவம், இடையறா உழைப்பு பாலாவிடம் என்னைக் கவர்ந்தவை.

சென்னை வருகையின்போது நான் நடத்தும் எந்த விழாவிற்கும் வேறு எந்த அலுவல் இருந்தாலும் அதைத் தள்ளி வைத்துவிட்டு எனது விழாவிற்கு வந்து சிறப்பிப்பார், எனது பால்ய நண்பர் பாலா.

அமைதியாக இருக்கும் பாலாவை அநாவசியமாகச் சீண்டி வம்புக்கு இழுத்தால் அவர்களை விரட்டி அனுப்பிவிடுவேன்.

இந்த நிகழ்வையெல்லாம் சென்னை ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றத்தில் அவருக்கு நடந்த பாராட்டு விழாவில் அவர் குறிப்பிட்டபோது நான் மெய்சிலிர்த்துப் போனேன்.

அவரது இந்திய வருகையின்போது, அவர் நடத்தும் எந்த விழாவிற்கும் சிறப்பு அழைப்பு வரும். உடன் படித்த மாணவன் இன்று உலகம் போற்றும் சாதனையாளராக விளங்குவது கண்டு நான் பெரிதும் பெருமிதம் கொள்வேன்.

நான் அமெரிக்கா சென்ற வாய்ப்பிலும் அவரிடம் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு பேசுவேன். அமெரிக்க தமிழ் மாத இதழ் 'தென்றல்' இவரது நேர்காணலைச் சிறப்பாக வெளியிட்டபோது, இதழின் பதிப்பாளர் தகவல்கள் பல தந்தமைக்கு என்னைப் பாராட்டினார்.

புதுக்கோட்டையைச் சேர்ந்த ஒருவர் 'பத்மஸ்ரீ' வாங்கியுள்ளார் என்ற பெருமித மகிழ்ச்சியில் புதுக்கோட்டை இலக்கியப் பேரவைத் தலைவர் திரு. மு. முத்துசீனிவாசன் மிகப் பிரம்மாண்டமாக அனைத்து அமைப்புகளையும் கூட்டிச் சிறப்பான பாராட்டு விழா ஏற்பாடு செய்திருந்தார்.

'சாதனையாளர் பலரைப் போற்றும் சாதனையாளர்' என்ற பெருமை திரு. மு. முத்துசீனிவாசன் அவர்களுக்கு உண்டு. இதுவரை 480 சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கி அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைப் புத்தகங்களாக ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறார்.



ஒரு தனிநபருக்காக - தனது நண்பருக்காக 70 ஆண்டுகால நட்பை நினைவுகூர்ந்து பாராட்டு விழா நடத்தப்பட்டது. உலக அதிசயமாக 'நட்பின் இலக்கணத்திற்கான நல்லதோர் விழா' என

எனது 'சாலைவிதிப் பாடல்கள்' புத்தக வெளியீட்டின் போதும், பூரம் சத்தியமூர்த்தி, சொ. அடைக்கலம் புத்தக வெளியீட்டு விழாக்களுக்கும் தவறாது வந்து சிறப்பித்தார். நண்பர் சொ. அடைக்கலம் எழுதிய 'பாலர் மலர்கள்' புத்தகத் தயாரிப்பு செலவு அனைத்தையும் தாமே ஏற்று உதவினார்.

படிப்பை விரும்பும் பாலா திரை நடிப்பையும் போற்றுபவர். கல்லூரி மாணவப் பருவத்திலிருந்தே தீவிர சிவாஜி கணேசனின் இரசிகர். இதைத் தகுந்த சந்தர்ப்பங்களில் சொல்லி மகிழ்வார்.

பாலும் பழமும், பாசமலர், பார்த்தால் பசி தீரும், பாவ மன்னிப்பு எனும் 'பா' வரிசைப் படங்கள் பாலாவுக்குப் பிடித்தமானவை.

படிக்கின்ற வாய்ப்பே முக்கியம் என்று நடிக்கின்ற வாய்ப்புகள் வந்தபோது அதனை தவிர்த்தார்.

கல்லூரி நாள்களில் மற்றொரு சக மாணவர் சண்முகசுந்தரத்துடன் கல்லூரி நாடகம் நடத்தியது மறக்க முடியாதது. திரு. சண்முகசுந்தரம் வேறு யாருமில்லை, பிரபல நடிகராகத் திகழ்ந்த ஏ.வி.எம். ராஜன் அவர்கள்தான்!.

வெள்ளை மனதுக்காரரான பாலாவிற்கு 'ஒயிட் அண்ட் ஒயிட்' சிறுவயதிலிருந்து பிடிக்கும்.

இப்போதும் ஒயிட் அண்ட் ஒயிட் உடையில் 75 வயதிலும் கம்பீரமாக, மிடுக்கான 'சிவாஜி நடை - நடிகர் ரவிச்சந்திரனின் முகத்தோற்றம் நான் பெரிதும் ரசிப்பவை. சாதனையாளர்களைப் பாராட்டத் தயங்காதவர் பாலா.

பத்மஸ்ரீ பாலாவின் வெற்றி வெகுசுலபத்தில் வந்ததல்ல. சிறந்த அறிவாற்றலாலும் சீரிய கடின உழைப்பாலும் எத்தனையோ இன்னல்களைத் தாண்டி, சவால்களைச் சமாளித்து, தடைக்கற்களைப் படிக்கற்களாக்கி, விடாமுயற்சியின் விஸ்வரூபமாக, வெற்றி எனும் சிகரத்தை எட்டியிருக்கிறார் பத்மஸ்ரீ டாக்டர் பாலா வி. பாலச்சந்திரன்.

தாமும் உயர்ந்ததோடு மட்டுமல்லாமல் பிறருக்கும் தரமான கல்வி அளித்து உயர்த்துபவராகவும் திகழ்கிறார். அதில் நிறைவு பெற்று மகிழ்கிறார்.

'ஜெயித்துக் காட்டுவோம்' என முன்னேற விழைவோருக்குப் பாலாவின் வாழ்க்கைப் பாடம் பாடப் புத்தகத்தில் பெரிதும் இடம்பெற வேண்டியவை.

பத்மஸ்ரீ பாலா - பத்மபூஷண் பாலாவாக மிளிர்வார்! உலக அரங்கில் ஒளிர்வார் என்பது திண்ணம். ●

***- பாலாவின் 70 ஆண்டுகால நண்பர் கூறியவை***

கொண்டு டாக்டர் பாலா செயல்பட்டார். வெற்றியின் சிகரத்தில் நிற்கிறார்.

டாக்டர் பாலா ஒரு மனிதநேய மாண்பாளர். நட்பை மதிப்பவர், போற்றுபவர். அவருடன் பள்ளியில் படித்தவர் குழந்தை இலக்கிய பணிச்செல்வர் என்று அழைக்கப்படும் திரு. பி. வெங்கட்ராமன், பால்யத்திலிருந்து தொடரும் அவரது நட்பைக் கௌரவிக்கும் வண்ணம், "நட்புக்கோர் திருவிழா" என்ற பெயரில், நண்பருக்காக விழா எடுத்துக் கௌரவித்தார் பாலா. இப்படி நட்பை போற்றும் நல்ல செயலை விழாவில் கலந்துகொண்ட பிரமுகர்கள்



பாராட்டினர்.

டாக்டர் பாலா உலகத் தலைவர்கள், பிரதமர்கள், அதிபர்கள், முதலமைச்சர்கள் எனப் பலருக்கும் அறிமுகமானவர். நட்புக் கொண்டவர். அமெரிக்க அதிபராக ஒபாமா வந்த போது, தமது ஆலோசகராக இருக்கும்படி டாக்டர் பாலாவை அழைத்துப் பேசினார். ஆனால், தனக்கிருந்த வேறு பணிகளை முன்னிட்டு, முழுநேர ஆலோசகராக இருக்க இயலாமையை மென்மையாகத் தெரிவித்தார், பாலா. அமெரிக்க அதிபரே அழைத்து ஆலோசகராக இருக்கும்படி கேட்டது, இவரது உலகளாவிய புகழுக்கு ஒரு சான்றாகும்.

தமது அனுபவங்களையும் பழக்கங்களையும் ஆற்றலையும் தமிழக மக்களுக்குப் பயன்படும்படி செய்ய வேண்டும் என்று மகாபலிபுரம் அருகில் "கிரேட்லேக்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட்" என்ற மிகப்பெரிய கல்லூரியை நிறுவியுள்ளார். உலகத் தரமான கல்வி அங்கு வழங்கப்படுகிறது. இங்கு பயில்கிற மாணவர்கள் அனைவர்க்கும் உலகளாவிய பெரிய நிறுவனங்களில், நல்ல உயர்ந்த சம்பளத்தில் வேலை பெற்றுத் தருகின்றனர் என்பது அக்கல்லூரியின் சிறப்பு.

அக்கல்லூரி இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத மாதிரி, வட்டவடிவில் நடுவில் திறந்தவெளி கலை அரங்கத்துடன் அமைந்துள்ளது. நவீன வசதிகளுடன், தளவாடங்களுடன், உலகப் புகழ்பெற்ற வெளிநாட்டுக் கல்வி நிலையங்களின் பேராசிரிய பரிமாற்றங்களுடன், அக்கல்லூரி அமைந்துள்ளது. இங்கு படித்துவிட்டு வெளிவரும் மாணவர்கள் உலகத் தரமிக்க ஆற்றலாளர்களாக வெளிவருகின்றனர். நம் நாட்டின் பெருமையை உணர்த்துகின்றனர் என்பது நமது நாட்டுக்குப் பெருமையாகும்.

கல்லூரியின் நுழைவாயிலில் உயரமான பீடத்தில் திருவள்ளுவர் சிலையை வைத்துள்ளார், டாக்டர் பாலா. காரணம் - திருவள்ளுவர் காட்டிய நெறிமுறைகள்தான், உலகத்தின் பொதுமறை. சாதி, மத வேறுபாடுகள் இன்றி மனிதநெறிகளைக் கற்றுக்கொடுப்பது திருக்குறளே. அதனால், திருவள்ளுவர் சிலையை வைத்துள்ளதாக டாக்டர் பாலா கூறுகிறார்.

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்"**

போன்ற குறள்களையும் சிலையில் பீடித்தில் வடித்துள்ளார். கல்லூரிக்குள் நுழையும் போதே திருவள்ளுவரைத் தரிசித்துவிட்டுத்தான் உள்ளே செல்லமுடியும்.

டாக்டர் பாலாவின் 80ஆவது பிறந்த நாள் 14.7.2017 அன்று கல்லூரி மாணவர்களாலும் பேராசிரியர்களாலும், கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்பட்டது. மாணவர்களும், பேராசிரியர்களும், நண்பர்களும் அரங்கு நிறைந்திருந்தனர். வண்ண விளக்குகளால் திறந்தவெளி அரங்கு ஜெகஜோதியாய்த் திகழ்ந்தது.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. "*Road to Glory*" என்ற தலைப்பில் கிரேட் லேக்ஸ் கல்லூரியில் எப்படி சுற்றுச்சூழலும் அருகில் உள்ள கிராமங்களும் முன்னேறியுள்ளன என விளக்கப்பட்டுள்ளது. டாக்டர் பாலாவை வாழ்த்தி பொன்னாடைகளும் நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன. டாக்டர் பாலாவை மாணவர்கள் 'அங்கிள் பாலா' என்றே அன்புடன் அழைக்கின்றனர்.

நண்பர்களை ஆரத்தழுவியும், பெரியவர்களை விழுந்து வணங்கியும் பாலா தன் நன்றியைத் தெரிவித்தார். படிகளில் துள்ளித் துள்ளி ஏறி மேடையை அவர் அடைந்தபோது, மறைந்த எம்.ஜி.ஆர். அவர்கள் மேடையேறும் அழகு தென்பட்டது. எண்பது வயதிலும் இளமையோடு இருப்பதை எடுத்துக்காட்டியது.

சிறப்புகளின் சிகரமாய் திகழும் டாக்டர் பாலா அவர்களுக்குப் புதுக்கோட்டை இலக்கியப் பேரவை சார்பில் பிரத்யேகமாக 24.12.2002 அன்று விழா எடுக்கப்பட்டது. ரோட்டரி சங்கத் தலைவர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், பல்துறைச் சான்றோர்கள் டாக்டர் பாலாவின் சிறப்புகளை எடுத்து விளக்கினர்; பாராட்டினர். தான் பிறந்த மண்ணில் தனக்குப் பாராட்டு விழா எடுத்ததைப் பெருமையாகக் கருதுவதாகவும், இப்பெருமையைத் தன் தாயாரின் திருப்பாதங்களில் சமர்ப்பிப்பதாகவும் டாக்டர் பாலா கூறினார்.

தான் பெற்ற அறிவாற்றலை மாணவர்கள் பெற்று உலகப் புகழ் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் கல்விக் களத்தில் இமயமாய் உயர்ந்து நிற்கும் டாக்டர் பாலா அவர்கள் நம்பிக்கைச் சுடரொளியாய் விளங்குகிறார். ஆயிரக்கணக்கான மாணவர்கள் அறிவொளி பெறச் சுடராய் விளங்குகிறார். அவர் நூற்றாண்டு தாண்டி வாழ வாழ்த்துவோம்! ●



# எங்கள் பாலா வி. பாலச்சந்திரன்!

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு! ஆகா! அழியாக்
கல்வெட்டில் பதித்திட்ட பொன்மொழிக்கு உயிர்கொடுத்து - உலகில்
மற்றவர்கள் உங்களைப்போல் பெயர் பெறவேண்டும் என்ற
மந்திரத்தை எங்களுக்குச் சொல்லுகின்ற மாமேதையே!

அந்நிய தேசத்தில் கால் பதித்து; அற்புதங்கள் செய்திட்ட பாலா! உங்களை
அறியாமல் இருந்து விட்டேன் இத்தனை நாளா! மன்னியுங்கள்!
என்னரும் இந்திய தேசம் என்ன தவம் செய்ததோ உங்களைப் பெற்றெடுக்க!
இறைவன் படைத்திட்ட அற்புதங்கள் பலவற்றில் இதுவும் ஒன்றன்றோ!

பன்முகங்களைக் கொண்ட பாலா வி. பாலச்சந்திரனே! இந்த
பாரதத்தின் பெருமைகளைப் பலரும் அறியும் வண்ணம்
என்னதான் செய்தீரோ! என்(று) எண்ணத்தில் எழுந்த ஐயத்தை - நீங்கள்
எழுதிய புதினமாம் "லலிங் லெஜண்டஸ்" தெளிவாக்கியது!

நீங்கள் புகழ்நிறைந்த புதுக்கோட்டை பூமி தந்த வரம்! கேட்கவா வேண்டும்?
நெஞ்சினிலே துணிவிருந்தால் வான் நிலவுக்கும் போய் வரலாம்!
ஆங்கிலம் பேசும் அமெரிக்காவுக்குச் சென்ற புதுகை நிலா எனும் பாலாவே!
அறிவுத் திறனை வளர்க்க அன்று நீங்கள் போட்ட அச்சாரமல்லவா!

பெறுகின்ற பட்டம் எதுவாகினும் அது பிறரும் பயன்பெற வேண்டும் - என்ற
பிடிவாத குணத்தினால் பேராசிரியராக, பணிசெய்ய விருப்பம் கொண்டீர்!
அரும் பெரும் புகழைக் கொண்ட பணி ஆலோசகரே! தாங்கள் நிறுவி
அற்புத "கிரேட் லேக்ஸ் பயிற்சிக் கூடத்தின்" வழிகாட்டியே!

கூடுவிட்டு கூடும்; நாடாறு; காடாறு மாதம் ஆண்டான் அரசன் விக்கிரமாதித்தன்!
கடல் கடந்து ஆறு மாதம், இந்திய மண்ணில் ஆறு மாதம் - என்று
வீடுவிட்டு வீடு வாழ்ந்து வெற்றி கொண்ட நீங்கள் வாழும் விக்கிரமாதித்தன்! நமது
வெற்றிக்கு வழி; லைப்ரரியும்; பிரபலங்களின் வாழ்க்கையின் பாடம் - எனவும்

தொழில் செய்ய வேண்டும் என்ற வெறி ரத்தத்தில் ஊறியிருக்க வேண்டும்
தொழில் முனைவுத் திறனுக்குத் தோல்வியும் வேண்டும் - அதன்மூலம் நல்ல
வழியும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் உழைக்கவும் வேண்டும் - என்ற
வாழ்க்கைத் தத்துவத்தை வழிமுறையாய்ச் சொல்லுகின்ற தத்துவமே!

வாணிபத்தின் வெற்றிக்குத் திட்டமிடுதல் மட்டும் போதாது - தொழிலில்
வகையான மாற்றத்தைக் கொண்டுவந்தால் அது நிலைத்திருக்கும் - என்ற
ஆணித்தரமான வார்த்தைகளை அனைவருக்கும் எடுத்துரைக்கும் - நல்ல
ஆலோசகரே! அன்பானவரே! அனைவரும் போற்றிப் புகழ்ந்திடும் பண்பானவரே!

அறிவுலகச் சிற்பியே! அரியபெரிய சாதனைகள் செய்து - இந்த
அகிலமெல்லாம் பாராட்டும் பன்முக வித்தகரே! அன்புப் பெட்டகமே!
பெருமை மிகும் "பத்மஸ்ரீ" பாலா வி. பாலச்சந்திரனே! தன்பட்டங்கள்
பெற்றது ஆயிரம் ஆனாலும் தம்பட்டம் அடிக்காத தன்னடக்கமே!

புதுப்புது சிந்தனைகள் யாவும் வாழும் புவியோர்கள் பயன் பெறவே - எனும்
பொன்னான எண்ணங்கள் கொண்ட நற்புதுகை பாலாவே!
எதுவரினும் அஞ்சாமல் தொழில் முனைக! எனச்சொல்லும் இனியவரே!
இனிவரும் காலமெல்லாம் இவ்வுலகம் உங்கள் பெயரைத்தான் உச்சரிக்கும்.



# வெளிநாடுவாழ் இந்தியர்களுள் பத்மஸ்ரீ விருதுபெற்ற தமிழர்

**நிர்வாகவியல் நிபுணர்களால் 'மேனேஜ்மென்ட் குரு' என அழைக்கப்படும் Dr.பாலா V.பாலச்சந்திரன் அவர்களுடன் ஆசிரியர் ச. விஜய் ஆனந்த் அவர்கள் எடுத்த சிறப்பு நேர்காணல்**

*அறிவாற்றலால் அகிலம் ஆளும் நிர்வாகவியல் மேதை Dr.பாலா V.பாலச்சந்திரன் அவர்களின் எளிமையான, அருமையான கருத்துக்களை இப்பேட்டியில் காணலாம்.*

**வாருங்கள், வாசகர்களே...**
**வினா தொடுப்போம்; விடைகளை செவி மடுப்போம்.**

விஜய் ஆனந்த் : வணக்கம்! கடந்த சூலை 5இல் பிறந்த நாள் கொண்டாடிய உங்களுக்கு அன்புப் பாலம் பத்திரிகையின் Belated Birthday Greetings! என்று வாழ்த்தி முத்தமிழ் வித்தகர் சேலம் சங்கர், எம்.ஏ. அவர்கள் எழுதிய வரலாற்று ஆய்வு நாடக நூலின் முதல் பக்கத்தில் 4 வரி வாழ்த்துடன் வழங்கிய ஒரு நிமிடத்திற்குள்...

Dr. பாலா : ஹா... ஹா... ஹா! எனப் பலமாகச் சிரித்து, நன்றி தெரிவித்து, உதவியாளர் தினேஷை அழைத்து அவர் எழுதிய ஆங்கில நூல்கள் மற்றும் அவரைப் பற்றி 'புதிய தலைமுறை' இதழில் வந்த கட்டுரைகளின் தொகுப்பு நூலை அன்புப் பாலம் பதிப்பாளர் திரு.கலியாணசுந்தரம் மற்றும் உங்கள் விருப்பத்திற்குரிய விஜய் ஆனந்திற்கு வழங்கினார்.

விஜய் ஆனந்த் : தமிழகத்தைப் பொறுத்தவரை Lakes என்றால் - ஆக்கிரமிப்பு (Encroachment). மகாபலிபுர கடலருகே உள்ள உங்க மேலாண்மைக் கல்வி நிறுவனப் பெயரோ Great Lakes, என்ன காரணம்?

Dr. பாலா : மெக்சிகன், ஒன்டாரியா, ஹுரி என ஏரிகள் கொண்டதைப் போல், வற்றாத ஜீவ நதியாக அறிவு நதி பாய வேண்டும் என்று Best of West, Best of East என்ற அடிப்படையில் - Greak Lakes பெயர்!

விஜய் ஆனந்த் : அப்படின்னா, Great Lakes வளாகங்கள் பெயர்?

Dr. பாலா : வகுப்பறைகள் பெயரே - வீராணம், மானஸரோவர் என ஏரிகள் பெயர்தான். வகுப்பறைகளின் தரையும், மேற்கூரையும் பச்சை, நீலம் என்ற வண்ணங்களில் நீரையும் வானையும் குறிப்பதாக அமைத்துள்ளோம்.

விஜய் ஆனந்த் : தொடங்கப்பட்ட ஆண்டு?

Dr. பாலா : 2005

விஜய் ஆனந்த் : மாணவர்கள் எண்ணிக்கை?

Dr. பாலா : 660

விஜய் ஆனந்த் : Great Lakes மேலாண்மை கல்வி நிறுவனம் வழங்கும் உயர்கல்வி விவரம்?

Dr. பாலா : M.B.A. - Technoprenurship

விஜய் ஆனந்த் : உங்க மாணவர்களில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய சிலர்களில், உங்க நினைவுக்கு வருபவர்கள்...

Dr. பாலா : பெரும்பாலான நிறுவனங்களின் C.E.O.க்கள் எங்கள் மாணவர்கள். அசோக் லேலண்ட் C.E.O. - வினோத் தேசாய், யூனி ப்ளை CEO எனப் பலர்.

விஜய் ஆனந்த் : உங்க முனைவர் பட்டத்திற்கான தீஸிஸ் தலைப்பு?

Dr. பாலா : Generalise Transportation Problem

விஜய் ஆனந்த் : உங்க குழந்தைப் பருவ நினைவு, ஏதேனும்...

Dr. பாலா : 1941, 1942 எனக்கு 4½ வயது. எனது அப்பா மற்றும் தீரர் சத்தியமூர்த்தி மூலம் காந்தியடிகளின் மடியில் நான் அமரும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது

இந்நாட்டிற்காக என்ன செய்வாய்? என்ற கேள்விக்கு - I will die for my country என்று பதில் சொன்னது இன்றும் பசுமையாக உள்ளது.

**விஜய் ஆனந்த் :** நாட்டிற்காக உங்கள் பங்களிப்பு?


**Dr. பாலா :** இராணுவத்தில் சேர்ந்து, 1962 சீனத் தாக்குதல் சமயத்தில் நாட்டைக் காக்கும் நல்ல பணியில் ஈடுபட முடிந்தது, பெரும் பாக்கியம்!

**விஜய் ஆனந்த் :** உங்க தொலைநோக்குத் திட்டம்?

**Dr. பாலா :** 4 வயது முதல் 10 வயதுக்குள்ளான மாணவர்களுக்குக் கல்வி பயிற்றுவித்து, நல்வழி போதனைகளைப் பயிற்சியளித்து, வெற்றிடமாக உள்ள தலைவர்களுக்கான இடத்தில் தலைவர்களை உருவாக்க வேண்டும்.

**விஜய் ஆனந்த் :** Great Lakes-இன் சமூகப் பங்களிப்பு?

**Dr. பாலா :** 26 கிராமங்களைத் தத்தெடுத்து, அனைத்து விதத்திலும் வளப்படுத்தி வருகிறோம்.



**விஜய் ஆனந்த் :** வெளிநாட்டு பேராசிரியர்கள், கல்வியாளர்கள் கற்பிக்கும் கிரேட் லேக்ஸில் நம் பண்பாட்டை எப்படி வளர்க்கிறீர்கள்?

**Dr. பாலா :** திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்புடன், 6 அடி திருவள்ளுவர் சிலை மூலம் வெளிநாட்டு மாணவர்களிடையேயும், பேராசிரியர்களிடையேயும் தமிழின் சிறப்பை கொண்டு செல்கிறோம்.

**விஜய் ஆனந்த் :** உங்க குறிக்கோள்?

**Dr. பாலா :** Aptitude + Attitude = Altitude இப்படி, பல க்ரேட் லேக்ஸில் பொறிக்கப்பட்டுள்ளன.

**விஜய் ஆனந்த் :** உங்க நிறுவன ஊழியர்கள்?

**Dr. பாலா :** நாங்கள் அனைவருமே ஒரே குடும்பத்தினர். எதிர்வரும் ஆகஸ்ட் 3ஆம் வாரத்தில்கூட, தொழிலாளர்களுடன் ஊட்டி, குன்னூர், மைசூர் செல்ல இருக்கிறோம்.

**விஜய் ஆனந்த் :** உங்க அம்மாவை பற்றி...?

**Dr. பாலா :** 3ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்த, என் தாய் தத்தம் துறைகளில் தலைச்சிறந்து விளங்கும் அளவில் மகன்களைப் பெற்றிருந்த போதிலும், எங்கள் தாயின் அறிவில், ஆற்றலில் நாங்கள் 1/3 பங்குதான்.

**விஜய் ஆனந்த் :** உங்க வளர்ச்சியை உங்க அம்மா பார்த்திருக்காங்களா?

**Dr. பாலா :** என்னோட 5 வருஷம் அமெரிக்காவில் இருந்தாங்க. அந்த சமயம், பிரபல பாடகர் டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் கூட எங்க வீட்டுக்கு வந்தாங்க.

**விஜய் ஆனந்த் :** உங்க மகன்கள்?

**Dr. பாலா :** சுதாகர், M.B.A. & Dr. திவாகர். ரெண்டு பேரும் அவங்க துறைகள்லெ அகிலம் போற்றும் ஆளுமைகள்!

**விஜய் ஆனந்த் :** மருமகள்கள்?

**Dr. பாலா :** மருமகள்கள் தமிழ்நாட்டிலிருந்துதான்.

**விஜய் ஆனந்த் :** க்ரேட் லேக்ஸின் ஸ்பெஷல்?

**Dr. பாலா :** எல்லோருமே என்னை Uncle Bala-ன்னுதான் கூப்பிடுவாங்க. பாரத ரத்னா டாக்டர் A.P.J. அப்துல் கலாமும் அப்படித்தான் கூப்பிடுவாரு. அவர் க்ரேட் லேக்ஸ் வந்திருக்காரு.

In Kalam, We trust

என்பதும் க்ரேட் லேக்ஸின் Saying.

**விஜய் ஆனந்த் :** தொழில் துறையில் முன்னேற உங்கள் ஆலோசனை?

**Dr. பாலா :** அறிவு, ஆற்றல் இரண்டும் தொழில்நுட்பத்துடன் கைகோர்க்க வேண்டும். தொழில்நுட்பம் மட்டுமே உலகம் முழுவதையும் இணைக்கும். நவீன தொழில்நுட்பம் மூலம்

We can regain the Paradise, lost.

வரும் 26ஆம் தேதி நடைபெறும் க்ரேட் லேக்ஸ் பட்டமளிப்பு விழாவுக்கு வாங்க.

**விஜய் ஆனந்த் :** இடம்?

**Dr. பாலா :** Chennai Trade Centre

**விஜய் ஆனந்த் :** நிச்சயமாக.

**Dr. பாலா :** ஒருமுறை திருவான்மியூரிலிருந்து, மகாபலிபுரம் க்ரேட் லேக்ஸ் ஒன்றாக செல்வோம். வழி நெடுக பேசிக்கொண்டே போகலாம். மகாபலிபுரம் சுற்றி எந்த ரிசார்ட்டிலும் தங்க வேண்டாம். என் விருந்தினராக க்ரேட் லேக்ஸில் தங்கலாம்.

**விஜய் ஆனந்த் :** பார்வையாளராக Great Lakes வருவதை விட, Guest Speaker-ஆக மாணவர்களிடையே உரையாற்ற அழைத்தால், நிச்சயம் பங்கேற்பேன்.

**Dr. பாலா :** உங்க Spirit அருமை. நிச்சயமாக! என்றார்.

*பேட்டி கண்ட நாள்: 22.07.2017*
*நேரம்: மாலை 4 - 6 மணி*
*இடம்: Dr. பாலா அவர்களின் திருவான்மியூர் இல்லம்*




# Dr. வி.பாலச்சந்திரன் எழுதிய புத்தகங்கள்













மறைமலை இலக்குவனார்

# கல்வித்தந்தை பாலா வாழ்க!



முனைவர் பாலா வி பாலச்சந்திரன் அவர்களைப் பார்க்கவும் அவர் புகழைக் கேட்கவும் அதன் விளைவாக அவர் பெருமையைப் பேசவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது புதுக்கோட்டை வேங்கடராமன் அவர்களால்.

காந்தியடிகள் அவருடைய ஊருக்கு வந்தபோது அண்ணலைக் காணவும் குழந்தையாக இருந்ததால் அவர் மடியில் அமர்ந்து அவருடைய வாழ்த்துக்களைப் பெறவும் பெறற்கரிய நல்வாய்ப்பினைப் பெற்றார் பாலா.

அண்ணல் காந்தியடிகள் இமயம் முதல் குமரி வரை எத்தனையோ முறை பயணம் செய்துள்ளார் என்பதும் அப் பயணங்களில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் அவருடைய நல்லன்பைப் பெற்றுள்ளன என்பதும் வரலாறு. ஆனால், இந் நிகழ்ச்சியின் சிறப்பு என்னவெனில் பாலாவைப் பார்த்தமாத்திரத்தில் 'நீ பெரியவனானதும் என்ன செய்யப்போகிறாய்' என்று காந்தியடிகள் கேட்ட கேள்வியும் அதற்கு அவர் அளித்த விடையும்தான்.

ஒருவேளை அப்படி யாராவது கேள்வி கேட்டால் என்ன விடை வழங்குவது என்பது குறித்து அந்த ஞானக்குழந்தை சிந்தித்துப் பெரியவர்களிடம் அதற்கான ஆங்கிலத் தொடரைத் தெரிந்துவைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. காந்தியடிகள் கேள்வி கேட்டதும் *"I will die for India"* என்று குழந்தை பாலா விடையளித்தது காந்தியடிகளையே வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்திவிட்டது. நாட்டுப்பற்றில் தம்முடைய தாய்மாமன் தீரர் சத்தியமூர்த்தி அவர்களுக்குச் சற்றும் சளைத்தவர் இல்லை என்பதைக் குழந்தையாயிருக்கும்போதே வெளிப்படுத்திய பாலா அவர்கள் கல்விகற்றுப் பேராசிரியராகப் பதவிபெற்றுப் பணியாற்றிய வேளையில் சீனப் படையெடுப்பு நேரிட்டது. சற்றும் தயங்காமல் தமது வேலையைத் துறந்து இந்தியப் படையில் சேர்ந்த பாலாவின் வீரம் காவியம் பாடிச் சிறப்பிக்கப்படவேண்டும். இரண்டாண்டுக் காலம் இந்தியப் படையில் உயர் அலுவலராகப் பணிபுரிந்தபோது அவரது குடும்பத்தில் எவ்வளவு துன்பப்பட்டிருப்பார்கள்? சீராட்டி வளர்த்த செல்வமகன் போர்க்களம் சென்றுவிட்டானே, என்ன ஆகுமோ, எப்போது திரும்புவானோ என்று எவ்வளவு தவித்திருப்பார்கள்! நாட்டுக்குத் தொல்லை வந்தால் உயிரைத் துச்சமாகக் கருதிப் போர்க்களம் செல்லவேண்டும் என்னும் எண்ணமும் முனைப்பும் ஒவ்வொரு இந்தியனுக்கும் ஏற்பட்டால் எந்த நாட்டினரும் நம்மைப் பகைக்க அஞ்சுவார்களல்லவா? அத்தகைய நாட்டுப்பற்று நம்மனைவருக்கும் ஏற்படவேண்டும் எனச் சொல்லாமலே செய்து வழிகாட்டினார் பாலா.

அமெரிக்கா சென்று வங்கிச் சேமிப்பை வளர்த்துக்கொண்டு 'தானுண்டு தன் குடுமபம் உண்டு' என மகிழ்ச்சியாய்க் காலம் கழிக்கப் பாலா விரும்பவில்லை. தாம் படித்த மேலாண்மைத்துறையில் பெரும்புகழ் நிறுவி, உயரிய விருதுகளையும் பதவிகளையும் பெற்றார். அப் பதவிகள் அளித்த பெருமையிலும் கிடைத்த ஊதியத்திலும் மகிழ்ந்திருந்து தாய்நாட்டை மறந்துவிடவில்லை. சிற்றூரகளில் பிறந்து உயர்கல்வி கற்கும் வாய்ப்பற்ற இளைஞர்கள் உயர்கல்வி பெறவேண்டுமே என்னும் ஏக்கமும் நம்மால் முடியும் என்னும் ஊக்கமும் அவரது தலைமைப்பண்புக்குத் தக்க எடுத்துக்காட்டுகளாகும்."யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் பெரியோர் வாக்கிற்கிணங்கத் தாய்நாட்டில் ஒரு கல்விநிறுவனத்தை நிறுவி, மாணவர்களுக்குச் சிறந்த கல்வியும், கற்றபின் உயர்ந்த பதவிகளையும் அவர்கள் பெறுதற்கு வழிவகுத்துத் தலைசிறந்த கல்வியாளராகவும் எடுத்துக்காட்டான பேராசிரியராகவும் விளங்கிவரும் பாலா அவர்களைப் பாராட்டுதற்கு ஆயிரம் நாக்குகள் வேண்டும்.


அவருடைய நிறுவனத்தில் பயிலும் மாணவர்களும் படித்துப் பட்டமும் பதவியும் அவர் துணையால் பெற்ற மாணவர்களும் அவரைத் தமது தந்தைநிலையில் வைத்துப் போற்றுகிறார்கள். அவருடைய கல்விநிறுவனத்துள் நுழைந்தாலே திருவள்ளுவர், விவேகானந்தர், காந்தியடிகள் சிந்தனைகளே எல்லா இடங்களிலும் பொறிக்கப்பட்டு மாணவர் உள்ளத்திற்கு நல்வழி காட்டுகின்றன. மாணவர்களிடம் பணம்பறிப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள நிறுவனங்கள் நிறைந்த இந் நாட்டில், மாணவர்களின் உள்ளத்தில் பெரியோர் காட்டிய நல்வழி ஆழப் பதிய வேண்டும் என்னும் நோக்கத்துடன் உழைத்துவரும் அவருடைய கல்விநிறுவனம் நம் அனைவரின் பாராட்டுக்கும் உரியது.

தாமும் முன்மாதிரியான பேராசிரியராக விளங்கி, எடுத்துக்காட்டான கல்வி நிறுவனத்தையும் இயக்கி நிறுவனங்களுக்கு நல்ல மேலாளர்களையும் நாட்டுக்கு நல்ல தலைவர்களையும் உருவாக்கிவரும் முனைவர் பாலா வி. பாலச்சந்திரன் அவர்கள் நலமும் வளமும் பெற்று நீடூழி வாழ்க.

**அன்பின் கொள்கலம் பண்பின் உறைவிடம்**
**அறிவின் புகழிடம் ஆற்றலின் புகலிடம்**
**கனிவின் சிறப்பிடம் கல்வியின் இருப்பிடம்**
**தாய்மை ஊற்று தூய்மை துலங்கிடம்**
**வாய்மையின் வாழ்விடம் நேர்மையின் விளக்கம்**
**பாலா வாழ்க பல்லாண்டு பல்லாண்டு**
**மனைவி மக்கள் மாணவர் சுற்றம்**
**அனைவரும் வாழ்க நலமெலாம் பெற்றே!** ●

ந.பானுமதி

# ஆயிரம் பிறை கண்ட அபூர்வ பாலா



**நல்ல குழந்தைகள் பிறப்பது பெற்றோருக்குப் பெருமிதம். நல்ல படிப்பாளி பள்ளிக்கும், கல்லூரிக்கும் பெருமை கொணர்வான் நல் இணக்கம் பேணுபவன் சமுதாயத்திற்கு அணி எனலாம். சிறந்த சிந்தனையாளன் உலகத்தின் ஒளி போன்றவன்.**

நல்ல குழந்தையாகப் பிறந்து, நன்றாகக் கல்வி கற்று, நட்பும், சுற்றமும் பேணி, தொலை நோக்கால் ஆழ்ந்து சிந்தித்து, அதைத் திறம்பட செயலாற்றிய பாலா என்ற பாலச்சந்திரன் அபூர்வமானவர்.

வானம் தொட்டுவிடும் தூரம்தான் என்ற நம்பிக்கை, தளரா முயற்சி, செய் தொழிலுக்கேற்ற பயிற்சி, அதற்கேற்ற சூழலை அமைத்துக் கொள்ளும் நேர்த்தி, இவைகளே இவர் வெற்றியின் இரகசியம் என்பேன்.

திரு. அப்துல் கலாம் சொன்னதைப் போல் கனவு கண்டவர்; கனவினில் வாழ்ந்தவர்; அதன் நீள் நெடும் பயனை மனிதர்களுக்கு அளித்தவர். 05-07-37-ல் புதுக்கோட்டையில் வழக்கறிஞர் திரு. அ. வெங்கட்ராம அய்யருக்கும், திருமதி செண்பகலட்சுமிக்கும் மூத்த மகனாகப் பிறந்தார். நடுத்தர வர்க்க குடும்பத்தில் இவர் 'சார்மிங்க் பாய்'. இளமையில் சிறிய 'சிவாஜி கணேசன்'. புதுகை ராஜா கல்லூரியில் 1959-ல் கணிதம் மற்றும் புள்ளியியலில் இளங்கலைப் பட்டம். (B.SC) 61-ல் அண்ணாமலையில் முதுகலைப் பட்டம் (M.Sc.) மற்றும் கல்லூரிப் பணி. என். சி. சி (NCC)யில் இணைந்து சிறப்பான பயிற்சி பெற்று 62-ல் இந்திய-சீனா போரில் சிறு சேவை அதிகாரியாகப் (SCO) பணியாற்றினார்.பொறியியல் கனவு கிளர்ந்து எழுந்தது. 69-ல் *Dayton* பல்கலையில் முதுகலை பொறியியல் (*M.sc Eng*) பட்டம். 72-ல் வணிக மேலாண்மையும், தொழிற்சாலை நிர்வாகமும் (*MSIA*) 1973-ல் முதுகலை வணிக மேலாண்மையும், பி.ஹெச்டியும் (*MBA, Phd*) இவரது பெரிய வெற்றி. புள்ளியியலுடன் சம்பந்தப்பட்ட *Operations Research* இவருக்கு தங்கப் பதக்கம் பெற்றுத் தந்தது.மேலாண்மை கணிதத்தையும் விட்டு வைக்கவில்லை இவர். கணக்கு ஆய்வாளர் பலருக்கு வசப்படாத சி.பிஏ(CPA) சி.எம்.ஏ(CMA)79-ல்இவரின் நீண்ட பதக்கப் பட்டியலில் சேர்ந்தது. கெலாக் மேலாண்மைப் பள்ளியில் இவரது பெயரில் இவரது மாணவர்கள் ஏற்படுத்தியுள்ள மில்லியன் டாலர் அமைவு ஒன்று போதும் இவர் இரு பெரும் நாடுகளின் கண்மணி என நிறுவ. உலகில் மேலாண்மைக் கல்விக்கென, அங்கு சிறப்புற பணியாற்றிய பேராசிரியருக்கென இப்படி ஒரு அமைவு, அதுவும் மாணவர்களால் ஏற்படுத்தப் பட்டது என்றால், அவரின் தங்கையாக, நெஞ்சம் பெருமிதத்தில் விம்முகிறது.

பண்டித நேருவில் தொடங்கி இன்றைய பிரதமர் வரை இவர் சந்திக்காத தலைவர்கள் இல்லை. புஷ், கிளின்டன், ஒபாமா என உலகத் தலைவர்கள் இவரிடம் விவாதிக்காத வணிகம் இல்லை. திரு.மன்மோஹன் அழைப்பின் பேரில் தேசிய மேலாண்மைப் பயிற்சியை வடிவமைத்து, இந்திய குடிமைப் பணி அதிகாரிகளுக்கு தேசிய நிர்வாகத்தின் நுணுக்கங்களைக் கற்பித்தார். திரு. சந்திர பாபு நாயுடுவின் அழைப்பிற்கு இணங்கி ஹைதராபாத்தில் இந்திய வணிகக் கல்வியகம் அமைத்தார். இந்தியாவில் காரைக்கால் துறைமுக தனியார் குழுமம், காத்ரேஜ் நுகர்வோர் பொருட்கள் குழுமம், *CRISIL, Allsec Technology Ltd, Valgen Infosystems* போன்ற பல நிறுவனங்களில் இயக்குனராக இருந்திருக்கிறார். வணிகக் கல்வியிலும், வணிகச் செயல்பாட்டு வியூகங்கள் அமைப்பதிலும், மிகச் சிறந்தநிபுணராகக் கருதப்படுகிறார். அரசாள்பவர்கள் செயல் வியூகங்களுக்கு இவரை நாடுகின்றனர்.

2001-ல் இவருக்கு 'பத்மஸ்ரீ' இந்திய அரசு வழங்கியது. இன்றைய மிகப் பெரிய தகவல் ஆராய்ச்சியில், தரவு கொண்ட தகவல் மேலாண்மையில் இவரது பங்கு அளப்பரியது. 2002-ல் இவர் இதயம் சற்று ஓய்வெடுக்க விரும்பியது. அது 2004-ல் புனித ஏரி மேலாண்மைக் கல்வியகத்திற்கு வித்திட்டது; கனவின் நனவென *GLIM* எழுந்து நின்றது. 14 ஆண்டுகளுக்குள் உலகின் சிறந்த வணிகக் கல்வி பயிற்றுவிக்கும் நிறுவனமென வளர்ந்து நிற்கிறது. இல்லினாய்ஸ் பொறியியல் கல்லூரியுடன் இணைந்து *MBA in Technopreneurship* இந்த வருடத்தில் இருந்து *GLIM* தொடங்குகிறது.

பாலா ஒரு ஆற்றல்; பாலா ஒரு அறிஞர்; பாலா ஒரு கல்வியாளர்; பாலா வியூகம் வகுப்பதில் சாணக்கியன்; பாலா ஒரு மேலாண்மைத் திலகம்; பாலா ஒரு எழுத்தாளரும் கூட. 55க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், *Reengineering, Revisited, Living Legends Learning Lessons, Customer Centricity culture and Customer Life Time Value* போன்ற பல புத்தகங்கள்... சொல்லிக்கொண்டே போகலாம்.

***"மாபெரும் சபையினில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழ வேண்டும்"***
***"இவன் தந்தை என்னோற்றான் கொல்?"*** •

வைதேகி பாலாஜி

# பிறந்தநாள் நல்வாழ்த்துகள்




பார்போற்றும்
பாலா
அனைவரிடத்திலும்
அன்பானவர்
சகலமும் கற்றவர்
மொழிகளில்
பெயர்ச்சொல்லானவர்
துன்பம் கண்டு
அசந்துவிடாதவர்
நற்சிந்தனையாளர்
அமைதியே உருவானவர்
அமலாக்குவதில்
செயல்வீரர்
மன்னிக்கும் மனமுடையவர்
பாருக்கே பாடமானவர்
தன்னிகரில்லாதவர்
தமிழ்ப் பண்பாளர்
எல்லோருக்கும் நல்லவர்
வினைச்சொல்லானவர்
அசத்தலானவர்
மதிக்கத்தெரிந்தவர்
ஆத்திரம் கொள்ளாதவர்
அரந்தையை தராதவர்
இன்சொல்லாளர்
பாசாங்கு அறியாதவர்
வெறுப்பில்லாதவர்

சுறுசுறுப்பானவர்
கல்வியில் வல்லவர்
இடைச்சொல்லானவர்
சத்துவகுணம் கொண்டவர்
அகந்தை அற்றவர்
முயல்வோருக்கு
அகராதியானவர்
ரஜோ குணமற்றவர்
திறமையின்
திறவுகோலானவர்
பாவையரை மதிப்பவர்
கலாரசிகர்
பாந்தனானவர்
இலட்சியம் உள்ளவர்
உரிச்சொல்லானவர்
சவால்களை ஏற்பவர்
மனிதகுலத்தில்
உயர்ந்தவர்
வீரத்தில் அர்ஜுனனானவர்
அகங்காரமற்றவர்
இன்னா நினையாதவர்
பாசமானவர்
பொறாமை இல்லாதவர்
நட்பானவர்
இலட்சத்தில் ஒருவர்
அறிவுச்சுடரானவர்

சரித்திரத்தில்
உதாரணமானவர்
உழைப்பணிந்தவர்
விவேகத்தில்
கண்ணனானவர்
சரளமான பேச்சாளர்
முடிசூடா மன்னனானவர்
எதிரிக்கும் பாங்கனானவர்
சோம்பேறித்தனம்
கல்லாதவர்
பொய்மையை
விரும்பாதவர்
காலகாலன் போன்றவர்
அறிவில் முதிர்ச்சியானவர்

சந்தன நெறியனானவர்
அந்நாளும்
எளிமையானவர்
செயல்படுவதில்
மந்திரியானவர்
அட்சயபாத்திரமானவர்
இன்னல்களையும்
வரவேற்பவர்
அறிவு பாரோகமுடையவர்
சுயநலமில்லாதவர்
வேற்றுமை பாராதவர்
இலம்போதரனின் பக்தர்
கணிப்பதில்
தேர்ச்சிப்பெற்றவர்





சங்கீதஞானம் கொண்டவர்
இந்நாளும் எளிமையானவர்
குணாதிபதியானவர்
அனுசரனையானவர்
சூரியன் இவர்
எந்தசூழலிலும் இயல்பானவர்
எவரிடத்திலும் பாகுபாடில்லாதவர்
அதிர்ஷ்டத்தை நம்பாதவர்
பிறர்நலம் விரும்புபவர்
எழுச்சி மிக்கவர்
சட்டம் ஈன்றவர்
வசந்தாவின் நாயகனானவர்
அதிசயமானவர்
இரக்க சுபாவமுள்ளவர்
சங்கரனின் சகோதரனானவர்
நற்பண்பாளர்
தேய்பிறையில்லா நிலவானவர்
வெண்பாவானவர்
நானிலமும் போற்றுபவர்
அயர்ச்சி அறியாதவர்
சந்தனநல்லோனானவர்
கணிதத்தில் கைதேர்ந்தவர்
அந்தியிலும் ஒளியானவர்
மகரந்தமானவர்
நிபுணர்களின் கணினியானவர்
ஆர்பாட்டமில்லாதவர்
தன்னிகரில்லாத புகழுடையவர்
பண்பாட்டை மதிப்பவர்
ஜெம்பகலட்சுமியின் வாரிசானவர்
ஆச்சர்யமானவர்
பசப்பறியாதவர்
அந்தஸ்து பாராதவர்
கிரேட்லேக்சின் திரவியமானவர்
ஆடம்பரமற்றவர்
மனிதகுலத்தின் மாண்பானவர்







கவிஞர் பிருந்தாவனன்

# மேலாண்மைக் கல்வியில் மேன்மைமிகு பாலா


படிப்பென்றால் இனிக்கின்ற கரும்பைப் போலா ?
பதில் "ஆம்"என்றே வந்தால் அதுதான் பாலா !
துடிப்போடு தமிழ் வழியில் பள்ளிக் கல்வி
தொடங்கியது புதுகையிலே ! தில்லை தன்னில்
அடிப்படையாய்க் கல்லூரிக் கல்விப் பட்டம் !
அதன்பின்னர் அயல்நாட்டில் அடுக்கடுக்காய்த்
தொடர்ந்ததம்மா முதுகலையில் பட்ட வேட்டை !
துவளாமல் மேலுமொரு முனைவர் பட்டம் !

நிர்வாக மேலாண்மைப் புலமை பெற்றான் !
நினைத்திருந்தால் நிறுவனங்கள் பலவற்றிற்குக்
கர்வமுடன் தலைவனென வீற்றி ருந்து
காசுபணம் சேர்த்திருக்க முடியும் ! ஆனால்
தற்பெருமை ஏதுமின்றிக் கற்ற வற்றை
தாய்நாட்டார்க்கும் பயிற்சிமூலம் நல்க
நிர்வாக நிறுவனத்தைத் தொடங்கி இங்கு
நிறைவாகப் படிப்பிக்கும் பணிசெய் கின்றான்

படித்துக்கொண்டே இருப்பேன் என்னும் பாலா
படிப்புடனே ஆசிரியப் பணியும் ஏற்றான் !
படித்துப் பட்டங்கள் பல பெற்றதோடு
பாரதத் தாய்பரிசாகத் தந்த பட்டம்

படிப்போடு செய்கின்ற பணிக்கும் தந்த
பத்மவிருதென் கின்ற உயர்ந்த பட்டம்
படித்தோரும் பாராட்டி வாழ்த்து கின்ற
பட்டம் ! கௌரவ மகுடம்சூட்டும் பட்டம் !
பள்ளியில் நான் படிக்கையிலே பார்த்த பாலா !
பத்மவிருதைப் பெற்ற இற்றைப் பாலா !
எள்ளளவும் கர்வமில்லை ! அதே சிரிப்பு !
எப்போது பார்த்தாலும் நலன்கள் கேட்பு
கள்ளமிலா வெள்ளைமனம் ! எந்தப்போதும் !
கடுகடுத்தே இல்லாமல் கனிவாய்ப் பேச்சு !
உள்ளமெலாம் கருணைமயம் ! நண்பர்க்கென்றும்
உதவிசெய்து மகிழ்கின்ற உயர்ந்த பாங்கு !

செண்பகலட்சுமி வெங்கட்ராமன் அன்புச்
செல்வனவன் படிப்பாலே பெருமை பெற்றான் !
என்னைவிட ஒன்றேகால் அகவை மூத்தோன் !
என்றாலும் பாலாவின் நட்பு வட்டம்
என்போன்ற இளையோருக்கும் இடமளிக்கும்
எண்பதகவை கடந்தே எண்பத்தொன்றை
அன்பனவன் தொடங்குகின்றான் ! வாழ்த்தி நிற்கும்
அனைவருடன் இணைந்தேன் இக்கவிதை மூலம்.





# பாலா அங்கிள்

பத்மஸ்ரீ பாலா அவர்களைப் பற்றி படித்தும், திரு.பி.வெங்கட்ராமன் அவர்கள் மூலம் கேட்டும் கடந்த பல வருடங்களாக மெய்சிலிர்த்திருக்கிறேன். எனது விடுமுறை, அவரது விடுமுறை... என சந்திப்புக்கு ஒத்துப் போகாமலே இருந்தது.

தற்போதுதான் அதற்கான சந்தர்ப்பம் வாய்த்தது. எனது வழிகாட்டி திரு.பி.வி.யிடம், அவரை சந்திக்க ஏற்பாடு செய்து தாருங்கள் என்றேன்.

பாலாவின் பால்ய நண்பரான அவர், "அவர் USA விலிருந்து வந்திருக்கார். அவரது 80வது பிறந்தநாள் விழாவிற்கு வரீங்களா?" என்றார்.

"அங்கு அவரை சந்திக்க முடியுமா..?"

"ம் கூம் செம கூட்டமா இருக்கும். தள்ளியிருந்து பார்க்கத்தான் முடியும்! இல்லேன்றா மகாபலிபுரத்தில் அவரது *Great Lakes*" யுனிவர்சிட்டியில் அடுத்த வாரம் சந்திக்கலாம்" என்றார்.


பிறகு பாலா சார், "நான் எத்திராஜ் கல்லூரி பவுண்டர்ஸ்டேக்கு தலைமை தாங்க வருகிறேன். அங்கு மோகன்தாஸை சந்திக்கிறேன். வரச்சொல்லுங்க" என்கவே - சென்றேன்.


விழா அமர்க்களம். 80 வயதில் இவர் பாயும் புலியாக... சீறும் சிங்கமாக - கனிவின் மயிலாக.... ஆஹா!


அப்படியே மைக்கை பிடித்ததும் கர்ஜனை! வயது வித்யாசத்தில் தன் பேச்சு ரசிக்கப்படாமல் போய்விடக் கூடாது என்று மிகவும் ஜாலியாக ஜோவியலாக பேசினார். பயங்கர கரகோஷம்.

"பெண்களுக்கு படிப்பிற்கு - சேவைக்கு இதர செயல்பாடுகளுக்கு முதலில் வேண்டியது எனர்ஜி. ஊக்கமும் உற்சாகமுகமாய் செயல்படுங்கள். வாழ்வில் எதையும் கொண்டு வரவில்லை, கொண்டுப் போகப் போவதில்லை. ஈ.கோ கூடாது என்பதை "*You Go, I go* இடையில் ஏன்... *EGO*" என்றார் பாருங்கள்... கல்லூரி பெண்களிடம் பலத்த வரவேற்பு.

அதேப் போலத் தான் கஷ்டப்பட்டு படித்த- ஆர்மியில் சேவை செய்த காந்தி, நேரு போன்றோரை சந்தித்த - அமெரிக்காவில் புரபசராக பணிபுரிந்த - இங்கு கல்லூரி ஆரம்பித்து செய்கின்ற சேவை - என நிறைய பேசினார். நிறைவாகவும். இவரை இவரது கல்லூரியில் 'அங்கிள்' என்றே அழைக்கின்றனர். அன்பான, அங்கிள்! ●



## கவிஞர் தாமோதரகண்ணன்





# திரைஆர்வலர் பத்மஸ்ரீ பாலா

இரத்தக்கண்ணீர் படத்தில் " குற்றம் புரிந்தவன்...." ராஜராஜன் படத்தில் " நிலவோடுவான் முகில்...." மங்கையர்க்கரசி படத்தில் " காதல் கனிரசமே..." போன்ற காலத்தால் அழியாத தமிழ்த்திரைப்பாடல்கள் 150 க்கும் மேல் எழுதியவர் கு.சா.கி. என்று அன்புடன் அழைக்கப்பட்ட கு.சா.கிருஷ்ணமூர்த்தி. எம்.ஜி.ஆர் நடித்த புகழ்பெற்ற 17 படங்களை இயக்கிய பெரும் புகழ்பெற்ற ப.நீலகண்டன் போன்ற 100 ஆண்டுகள் கண்ட கலைஞர்களைச் சரியாக இனம் கண்டு நினைவு கூருபவரும் குழந்தை இலக்கியச் செல்வரும் பணிச்செல்வருமான திரு பி.வெங்கட்ராமன் அய்யாவிடமிருந்து வரும் ஒவ்வொரு அலைபேசி அழைப்புகளும் என் முன்னேற்றப் பாதையை முன்னெடுத்துச் செல்லக் கூடியவையாகும். அந்த வகையில் ஓர் அலைபேசி அழைப்பில் "புதுக்கோட்டையின் கலையுலக மன்னர் - தவநடிக பூபதி பி.யு.சின்னப்பா நூற்றாண்டு வருகிறது. அவரைப் பற்றி ஓர் ஆவணப்படம் நீங்கள் இயக்க வேண்டும். அதற்கான பணியை முன்னிருந்து நீங்கள் செய்யுங்கள். பின்னிருந்து வேண்டிய உதவிகள் அனைத்தும் நான் செய்து தருகிறேன்" என்னும் அன்புக் கட்டளை வந்தது. அதன்படி இயங்கினேன் " கலைச்சிகரம் பி.யு. சின்னப்பா" என்னும் ஆவணப்படத்தை இயக்கினேன்.

பி.வெங்கட்ராமன் அய்யாவின் அன்புத்தம்பி திரு. எஸ்.பி.பாலு, புதுகையின் புதல்வர் எய்ம்ஸ் கல்வி நிறுவனர் கே.டீ.கந்தசாமி ஆகிய இருவரும் இந்த ஆவணப்படத்தின் ஒளிப்பதிவு உள்ளிட்ட வேலைகளின் போது களப்பணியில் எம்மோடு தோளோடு தோள் நின்ற பெருமக்களை இங்கே பெருமையோடு நினைவுகூர்கிறேன்.

இப்படத்தில் அமெரிக்காவில் வாழும் புதுக்கோட்டையைச் சேர்ந்த இந்தியரான பத்மஸ்ரீ பாலா அய்யா, திரைப்பட ஆய்வாளரும் நூலாசிரியருமான திரு. வாமணன், புதுக்கோட்டையில் வாழ்ந்து வருகின்ற ஆசிரியரும் புல்லாங்குழல் வித்துவானுமாகிய திரு. ராஜகோபால், ஞானாலயா நூலக நிறுவனர் திரு. பி.கிருஷ்ணமூர்த்தி, பி.யு.சின்னப்பா வழக்கறிஞர் மகன் திரு.கே.எஸ்.கணபதி, முன்னாள் டிவிஎஸ் தொழிற்சங்கத்தலைவர் காசிநாதன், பி.யு.சின்னப்பா புகழ்பாடிடும் பி.யு.சின்னப்பா நகர் எஸ்.சுதந்திரராஜன், அய்யனார்புரம் சந்திரதுரை, எய்ம்ஸ் கல்வி நிறுவனர் கே.டீ.கந்தசாமி போன்ற அறிஞர் பெருமக்கள் நேர்காணல்கள், பி.யு.சின்னப்பா நடித்த திரைக் காவியங்கள், பி.யு.சின்னப்பா நடந்த புதுக்கோட்டை பூமியும் 1.30 மணி நேர ஆவணப்படத்தில் இடம் பிடித்துள்ளன.

ஆவணப்படத்தின் தொடக்கத்தில் பத்மஸ்ரீ பாலா அவர்கள் தோன்றுவார். படப்பிடிப்பின்போது குறித்த நேரத்திற்கு பத்மஸ்ரீ பாலா அவர்கள் வந்தார். மயிலாப்பூர் அருகே பள்ளிக்கூட நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக வந்த போது எங்களுக்காக நேரம் ஒதுக்கி பி.யு. சின்னப்பாவை நேரில் பார்த்த சாட்சியாகவே பல்வேறு



அரும் பெரும் செய்திகளைப் பதிவு செய்தார்.

பத்மஸ்ரீ பாலா அய்யா அவர்கள் மன்னர் கல்லூரியில் படிக்கின்ற போது சிறந்த நாடக நடிகராகவும் பல்வேறு மேடையில் தோன்றி நடித்தவர். தமிழ்த்திரையுலகம் மீது அறிவார்ந்த இரசனையும் உடையவர். நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் அதிதீவிர இரசிகர் என்பதை அனைவரும் அறிவர். புதுக்கோட்டையைச் சேர்ந்த பிரபல நடிகர் ஏவிஎம் ராஜன், பத்மஸ்ரீ பாலா அய்யா அவர்களின் வகுப்புத் தோழர்.

பத்மஸ்ரீ பாலா அய்யா அவர்கள் நேர்காணலின் போது பி.யு.சின்னப்பாவின் பன்முக ஆளுமை குறித்து கூறியுள்ள கருத்துக்களைச் சுருக்கமாகத் தருகிறேன்.

''அந்தக் காலத்தில் நான் படித்த குலபதி பாலையா பள்ளிக்கு பி.யு.சின்னப்பா ஒரு நிகழ்ச்சிக்கு அழைத்துவரப்பட்டார். கலைவிழாவில் நாடகம் நடந்தது. அதிலே நான் நடித்தேன். என்னுடைய நடிப்பாற்றலை வெகுவாக ரசித்துப் பாராட்டினார். பி.யு.சின்னப்பாவுக்கு முன்மாதிரி பி.யு.சின்னப்பாவே தான். தொழில்நுட்பம் வளர்ச்சி இல்லாத காலக் கட்டத்தில் பேச்சும் பாட்டும் வீரதீரக்கலைகளும் ஒருங்கிணைத்து நாடக உலகிலும் திரை உலகிலும் தந்தவர். தம் தந்தையாரை முதல் குருவாகக் கொண்டு உன்னால் முடியும் என்னும் தன்னம்பிக்கைக்கு சான்றாகத் திகழ்ந்தவர்."

படம் எடுத்து முடித்த பின்னர் மயிலாப்பூர் விண்டேஜ் ஹெரிடேஜ் அரங்கம், மக்கள் குரல், தி-இந்து, குங்குமம், திருச்சி வானொலி, பொதிகைத்தொலைக்காட்சி, முகநூல், மின்-அஞ்சல் யுடியுப் (*youtube*) உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களில் பேசப்பட்டன... திருவான்மியூரில் உள்ள பத்மஸ்ரீ பாலா அய்யா அவர்களின் அரங்கத்தில் பி.வெங்கட்ராமன் அய்யா வேண்டுகோளின் படி புதுக்கோட்டை தின விழா கொண்டாடப்பட்டது. அவ் விழாவில் சிறப்பு விருந்தினர் பத்மஸ்ரீ பாலா அவர்கள் விழாவின் தொடக்க நிகழ்வாக அந்த அரங்கத்திலும் "கலைச்சிகரம் பி.யு. சின்னப்பா" ஆவணப்படம் திரையிடப்பட்டது. தொடர்ந்து கு.சா.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பாடல் தொகுப்பும் திரையிடப்பட்டது. பத்மஸ்ரீ பாலா அய்யா அவர்கள் சிறப்புரையாற்றும் போது வெகுவாக என்னுடைய உழைப்பைப் புகழ்ந்துரைத்தார். கூட்டத்தில் என்னிரு கைகளைப்பற்றி அன்பாக முத்தமிட்டார். பத்மஸ்ரீ பாலா அய்யா அவர்கள் என் வாழ்நாளில் மறக்க முடியாதவர்.

பி.வெங்கட்ராமன் அய்யா அவர்களின் வேண்டுகோளின்படி நான் அனுப்பும் ஒவ்வொரு மின்னஞ்சலுக்கும் அழகாக உடனுக்குடன் பதிலினைப் பதிவுசெய்வார். பி.வெங்கட்ராமன் அய்யா அவர்கள் எனக்கு அள்ளித்தந்த கணக்கிலடங்கா அன்பு நட்பு வட்டத்தில் பத்மஸ்ரீ பாலா அவர்கள் அன்பு பொக்கிஷம்.

வாழ்வில் நான் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரிடமும் ஏதேனும் சில நல்ல குணத்தையறிந்து அதைப் பின்பற்றுவேன். பத்மஸ்ரீ பாலா அவர்களிடம் நான் கற்றுக் கொண்ட இரண்டு நல்லகுணங்கள் அன்பும் காலந்தவறாமையும். ●

## வாசகர் கடிதம்

அன்புப் பாலம் ஜூன் இதழின் 'தேவை - சிந்தனை மாற்றம்; சீர்திருத்தம்' என்ற ஆசிரியர் ச. விஜய் ஆனந்த் அவர்களின் தலையங்கம் மிக அருமை! மாணவர் நலனிற்கான அவசியமான பதிவு.

அருவிப் பதிப்பகத்தின் 'சிந்தனைச் சாரல்' - கருத்துக்களின் பெட்டகம்.

அறிவுக்கு விருந்து - 'அறிவை அலசிட வாரீகளா?' பகுதி.


திரு. சேலம் சங்கர் அவர்களின் 'சினிமா வரலாறு' சிறு வயதில் டூரிங் டாக்கீஸில் பார்த்த காதல் மன்னன் ஜெமினி கணேசன் படங்களை அசைபோட வைத்தது.

மொத்தத்தில் ஜூன் மாத இதழ் - ஒரு பொக்கிஷம்!



*- திருமதி லஷ்மி கோவிந்தராஜு*
*வாசகி - சென்னை*

நீரை. அத்திப்பூ



# வாழ்க நலத்துடன்...

பாலா தெளிதேனா
பண்பின் இனிமை சொல்ல!
வேலா சூலமா
விரிந்த அறிவு கூர்மை சொல்ல!
நாளா பொழுதா
போதுமா சிறப்பு சொல்ல!
பாலா என்றாலே
பழகினால் நெஞ்சினிக்கும்!

வெளிநாடு வாழ்தமிழர்
வெற்றியில் இமயமலை
அளித்திட்ட பத்மஸ்ரீ
அத்தாட்சி வேறில்லை!
களிப்பூட்டும் நட்புமனம்
கண்டோமே விழாவினிலே
விழிப்பூட்டும் இவர்பேச்சு
வெற்றி ஒன்றே வாழ்க்கையிலே!

கல்விப்பணி பெருங்கடலாய்
கிரேட் லேக்ஸ் பெயரினிலே
காலமும் நிலைத்திருக்கும்
பெரும்புகழ்சேர் பெயரினிலே!
நல்லாசான் அமெரிக்க
நற்கலைக் கழகத்தில்
நமக்கும் இங்கு வழிகாட்டும்
நற்சேவைச் சிறப்பினிலே!

அமெரிக்க தலைமைக்கே
ஆலோசனை மையம்
அவர்திறமை கண்டதனால்
அழைப்பார்கள் பலசமயம்
நமக்கெல்லாம் புதுக்கோட்டை
நற்பெயரைத் தினம் பொழியும்
நல்லமழை சிறப்பாக
நனைந்தநிலம் குளிர்ச்சிபெறும்!

திறமைகளை ஊக்குவிப்பார்
தினமதற்கு செலவு செய்வார்
வறுமையுற்ற பேர்களுக்கு
வாழவழி காட்டிவைப்பார்!
பெருமை சொல்லவாய்திறந்தால்
பேரமைதி கடைபிடிப்பார்!
நிறைமனத்தால் வாழ்த்திடுவோம்
நீண்ட ஆயுள் வேண்டிடுவோம்!

இறைவன் அருளால் நற்சான்றோர்
எல்லா நலமும் மிகப்பெற்று
நிறைந்த ஆயுள் கோடியென
நிலைத்த சிறப்புடன் வாழியவே!
எண்பதைத் தாண்டி இன்னும்
எண்ணற்ற ஆண்டு நெஞ்சில்
இன்பமே நிறைத்து வாழ்க!
இறைவன்தான் அருள்வானாக!

வாழ்க நலத்துடன்...

Owned and Published by P. kalyanasundaram from New No.16, 46th Street, 9th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. South India, Printed by M. Sadique Batcha at Graphic Park, 78, Big Street, Triplicane, Chennai-5. Editor: P. Kalyanasundaram.